# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2094 - 2018 ඔක්තෝබර් මස 19 වැනි සිකුරාදා - 2018.10.19**

*2094 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 198 |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 199 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

197-B81459-353 (2018/10)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## குருநாகல் மாவட்ட நீதிமன்றம்

பிசுக்கால் ஏலத்தில் விற்பனை செய்வதற்கான அறிவித்தல்

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி,
சேர் சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை,
த. பெ. இல. 2085,
கொழும்பு 02.

வழக்கு இல. : *1642*/MB
எஸ்கிசி இலக்கம் : *13/2018*

-வாதி-

எதிராக

ஜயவர்தன முதியன்சேலாகே ரஞ்ஜித் சாந்தலால்,
“திஸ்ஸ ஸ்டோஸ்” பொறுப்பில் எபேவத்த,
பம்முனுஸ்ஸ,
பல்லந்தெனிய, குருநாகல்.

-பிரதிவாதி -

மேற்குறிப்பிட்ட இலக்கத்தினை உடைய வழக்கின் 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வழங்கபபட்ட தீர்ப்பின்படி குறிப்பிட்ட வழக்கின் மேற்குறிப்பிட்ட பிரதிவாதியிடமிருந்து அறவிடவேண்டிய ஆரம்ப கடன் தொகை மீதி 2013.04.30 ஆந் திகதியாகும் பொழுது அறவிடப்பட வேண்டிய ஆரம்ப கடன் மீதியான ஆறு இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து நாநூற்று மூன்று ரூபா அறுபது சதம் (ரூபா 686,403.60) மற்றும் 2013.05.01 ஆந் திகதியிலிருந்து குறிப்பிட்ட ஆறு இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து நாநூற்று மூன்று ரூபா அறுபது சதத்திற்கு (ரூபா 6,86,403.60) வருடாந்தம் அறவிடவேண்டிய 14% வீத வட்டியினையும் அத் திகதியிலிருந்து பிரதிவாதியினால் ஒழுங்கான முறையில் தவணைப்பணம் செலுத்த தவறியமையினால் நிலுவையாகவுள்ள தவணைக் கட்டணமான இரண்டு இலட்சத்து நாற்பத்து ஐயாயிரத்து ஐநூற்று ஐம்பத்து ஏழு ரூபா இருபத்து இரண்டு சதத்திற்காக (ரூபா 2,45,557.22) 2013.05.01 ஆந் திகதியில் குறிப்பிட்ட நிலுவைத் தொகைக்கு மாதாந்தம் திரண்டுள்ள 02% வீதமான மேலதிக வட்டியான எழுபத்து ஓராயிரத்து ஐநூற்று பதினெட்டு ரூபா அறுபத்து எட்டு சதத்தினையும் (ரூபா 71,518.68) மேற்குறிப்பிட்ட இரண்டு இலட்சத்து நாற்பத்து ஐயாயிரத்து ஐநூற்று ஐம்பத்து ஏழு ரூபா இருபத்த இரண்டு சதத்தினை (ரூபா 2,45,557.22) செலுத்தி முடிக்கும் வரையில் குறிப்பிட்ட தொகை மீது மாதாந்தம் 02% வீத வட்டியினையும் இந்த வழக்கின் தீர்ப்பின் திகதியிலிருந்து சம்பந்தப்பட்ட முழுத் தொகையினையும் அறவிடும் திகதி வரை குறிப்பிட்ட முழுத்தொகை மீது சட்டரீதியான வட்டியினையும் வழக்கு கட்டணத்தினையும், ஏலவிற்பனை கட்டணத்தினையும் அறவிட்டுக் கொள்வதற்காக குருநாகலை மாவட்ட நீதிமன்ற பதிவாளர்/பிரதி பிசுக்கால் ஐ. உடுவில ஆரச்சியினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்ட குறித்த பிரதிவாதிகளுக்குச் சொந்தமான இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள அசையா ஆதனம் 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி பி. ப. 1.00 மணிக்கு குறிப்பிட்ட ஆதனம் அமைந்துள்ள வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், குடாகல்கோரளையில், வேவுடவில்லி ஹத்பத்துவவில் குருநாகல் பிரதேச சபை எல்லையில், இலக்கம் 788 ஹெட்டிகெதர கிராம அலுவலர் பிரிவில் மாஸ்பொத்த பிரதேச சபை எல்லையில் பமுனுஸ்ஸ கிராமத்தில் இலக்கம் 56/2003 A மற்றும் 2003.02.15 ஆந் திகதியிடப்பட்ட காணி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டிலக்கம் 33 எபே எஸ்டேட் என்ற காணியில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பன இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

### அட்டவணை

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், குடாகல்கொட கோரளையில், வேவுடவில்லி ஹத்பத்துவவில் குருநாகல் பிரதேச சபை எல்லையில், இலக்கம் 788 ஹெட்டிகெதர கிராம அலுவலர் பிரிவில் மாஸ்பொத்த பிரதேச செயலாளர் பிரிவில் பமுனுஸ்ஸ கிராமத்தில் அமைந்துள்ள எபே எஸ்டேட் என்ற காணிக்கு 2003.02.15 ஆந் திகதி நில அளவையாளர் எம். டபிள்யு. ஆரியரத்ன என்பவரினால் அளந்த தயாரிக்கப்பட்ட 56/2003 A என்ற இலக்கத்தினை உடைய காணி வரைபடத்தின்படி 33 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கு : 19 ஆம் இலக்க காணித்துண்டும் ; கிழக்கு : 13 ஆம் இலக்க காணித்துண்டும் (20 அடி அகலப் பாதையும்) ; தெற்கு : 36 ஆம் இலக்க காணித்துண்டும் ; மேற்கு : 32 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்துள்ளன. இக்காணித்துண்டின பரப்பளவு பதினைந்து பேர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்டதாகும். (0ஏ.0றூ. 15பே.) இந்த காணியும் அதில் உள்ள கட்டிடங்கள், மரங்கள் மற்றும் அதில் உள்ள அனைத்துடன் 56/2003 A என்ற இலக்கததினை உடைய காணி வரைபடத்தின்படி 13 ஆம் இலக்க காணித்துண்டு. (20 அடி அகலப் பாதையும்) 9 ஆம் இலக்க காணித்துண்டும் (30 அடி அகலப் பாதை) நில அளவையாளர் எம். டபிள்யு. ஆரியரத்ன என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 55/2003 A என்ற இலக்கத்தினை உடைய 2003.02.15 ஆந் திகதியிடப்பட்ட காணி வரைபடத்தின்படி குறிப்பிடப்பட்டுள்ள பாதைகளை பொதுவாக பாவிப்பதற்கும் பராமரிப்பதற்குமான உரிமையுடன் இக்காணித்துண்டு குருநாகல் காணிப்பதிவு அலுவலகத்தில் A1531/59 என்ற தலைப்பின கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ரீ. என். குலசேகர,
பதிவாளர்/பிரதி பிசுக்கால் உத்தியோகத்தர்,
மாவட்ட நீதிமன்றம், குருநாகல்.

மாவட்ட நீதிமன்றம்,
குருநாகல்,
2018, ஒற்றோபர் 4.

10-1192

# நானாவித அறிவித்தல்கள்

## களனி பௌத்த மகளிர் தருமச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

வண. அத்துரலியே ரத்தன தேரர் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "களனி பௌத்த மகளிர் தருமச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த சங்கத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(அ) குறைந்த வருமானம் பெறும் பௌத்த குடும்பங்களைச் சேர்ந்த இலம்பாடுற்ற, கைவிடப்பட்ட பெண்பிள்ளைகளுக்கு ஆரம்ப மட்டத்திலிருந்து பல்கலைக்கழகத் தரம் வரை கல்வியளித்து அவர்களின் கல்வி, நற்பண்புகள் மற்றும் கலாசாரச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதன்மூலம் கிரில்லவல, வேபட, ஜயா மாவத்தை, 307/16 ஆம் இலக்கத்தில் "செனஹச தரி செவன சிறுவர் மனை" என்ற பெயரில் செனஹச சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றைப் பேணுதல்;

(ஆ) கம்பஹா மாவட்டத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களைத் தெரிவு செய்து அவர்களின் கல்வியையும் தேர்ச்சிகளையும் ஊக்குவிப்பதற்கு அவசியமான சுகாதார வசதிகளையும் உயர்தொழிற்சார் தேர்ச்சிகளையும் பெறுவதற்கு வழிகாட்டுதலும் அவர்களுக்கு நிதிசார் புலமைப்பரிசில்களை அளித்தலும்;

(இ) பௌத்த மதம் பற்றி எல்லோரும் நம்பிக்கை கொள்ளும் வகையில் செயலாற்றுதலும் பௌத்த மதத்தை உலகெங்கும் பரப்புவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தலும்,

பிறவும்.

வண. அத்துரலியே ரத்தன தேரர்,
பாராளுமன்ற உறுப்பினர்.

10-1190

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.